02/08/2021

புதுக்கோட்டை மாவட்ட துணை ஆணையர்(மா வ) (முகூபொ) அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி.பா.காஞ்சனா, எம்.காம்.,

ந.க. 3479/2018/அ6, நாள்: .07.2021

பொருள்: பொதுப்பணிகள் - பணிவரன்முறை - வணிகவரித்துறை - திருச்சிக் கோட்டம் - புதுக்கோட்டை(மாவ)மாவட்டம் - பணியிடை மறைந்த அரசு ஊழியர் திரு.செ.அசோக்குமார் என்பவரது மகன் திரு.அ.கண்ணன், இளநிலை உதவியாளர் - கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்து அரசாணை பெறப்பட்டது - பணிவரன்முறை செய்தும் தகுதிகாண் பருவம் துவங்கியும் உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (D) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்: 26.02.2021.
2. கூடுதல் ஆணையர்(நிர்வாகம்), முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர், சென்னை. கடித எண்.ஒய்-3/714550/2020, நாள்:04.05.2021.
3. அரசு கடிதம் எண். 2403/அ2/2020-1, நாள்:24.03.2021.
4. இணை ஆணையர் (மாநில வரிகள்), திருச்சிக்கோட்டம். செ.மு.ந.க. 3697/2014/ஆ2, நாள்: 06.12.18.
5. துணை ஆணையர் (மாநில வரிகள்), புதுக்கோட்டை. செயல்முறைகள்.ந.க. 3479/2018/அ1, நாள்: 20.12.2018.

ஆணை:-

பார்வை 4-ல் காணும் இணை ஆணையர் (மாநில வரிகள்),திருச்சிக்கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி பணியிடை மறைந்த அரசு ஊழியர் திரு.சொ.அசோக்குமார் என்பவரது மகன் திரு.அ.கண்ணன் என்பவர் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டு, பார்வை 5-ல் காணும் செயல்முறைகளின்படி அறந்தாங்கி வரிவிதிப்புச்சரக, மாநிலவரி அலுவலர் அலுவலகத்தில், 24.12.2018 பிற்பகல் முதல் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை 1-ல் காணும் அரசாணையின்படி தனியர் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளமையால் பார்வை -2-ல் காணும் கூடுதல் ஆணையர்(நிர்வாகம்), முதன்மைச் செயலர் / வணிகவரி ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து, அவர் பணியேற்ற நாளான 24.12.2018 பிற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிவரன் முறை செய்தும், தகுதிகாண் பருவம் துவங்கியும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேலும், தனியாளர் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளில் இருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்தும் ஆணையிடப்படுகிறது. இப்பணிக்காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

துணை ஆணையர்(மாவ)(முகூ.பொ),
புதுக்கோட்டை.

பெறுநர்

திரு.அ.கண்ணன்,
இளநிலை உதவியாளர்,
மாநிலவரி அலுவலர் அலுவலகம்
அறந்தாங்கி,வரிவிதிப்புச் சரகம்.
.... அறந்தாங்கி, மாநிலவரி அலுவலர் மூலமாக.

நகல்: மாநிலவரி அலுவலர், அறந்தாங்கி வரிவிதிப்புச்சரகம்.

நகல்: இணை ஆணையர்(மா.வ), திருச்சிக் கோட்டம் அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

வணிகவரி அலுவலர்
அறந்தாங்கி